07 01 2026 WEDNESDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சூரிய மின்சக்திக்கான உபகரணங்கள் உற்பத்தி இரண்டு மடங்குக்கும் கூடுதலாக அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவது தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

- அஇஅதிமுக - பிஜேபி கூட்டணியில் பாமக இணைந்துள்ளது.

- வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றிபெற 394 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சூரிய மின்சக்திக்கான உபகரணங்கள் உற்பத்தி இரண்டு மடங்குக்கும் கூடுதலாக அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழ் ஒன்றில் வெளியான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

மாற்று எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவது தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 49 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. ஜி.ஆர். சுவாமிநாதனுக்கு எதிராக வெளியிடப்படவுள்ள புத்தகத்தை பறிமுதல் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை அவசரமாக விசாரனை செய்த தலைமை நீதிபதி திரு. எம்.எம். ஸ்ரீவஸ்தசவா, நீதிபதி திரு. அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

*மிகவும் அவதூறான, களங்கம் ஏற்படுத்தும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ள இந்தப் புத்தகம் குறித்த புகார் மீது, காவல்துறையே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும், இதற்கு கூட நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமா என்றும் நீதிபதிகள் வினவினர்.*

*அறிவுசார் தளமான புத்தக கண்காட்சியில் இந்த புத்தகத்தை விற்பனை செய்ய எவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டது என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.*

*புத்தக பதிப்பாளர் மீது தாமாக முன்வந்து, நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதிகள், இதுகுறித்து 3 வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு பதிப்பகத்திற்கு உத்தரவிட்டனர்.*

>>>>>><<<<<<

*அஇஅதிமுக - பிஜேபி கூட்டணியில் பாமக இணைந்துள்ளது.*

*இன்று சென்னையில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியை சந்தித்து, பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் கூட்டணியை உறுதி செய்தார்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. எடப்படி பழனிசாமி, பாமகவிற்கு ஒதுக்கப்படும் இடங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், இதுகுறித்த விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும் என்று கூறினார்.*

*திரு. அன்புமணி ராமதாஸ் பேசுகையில், மக்கள் விரோத திமுக அரசை அகற்ற வேண்டும் என்ற நோக்கில் தங்கள் கட்சி இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளதாக தெரிவித்தார்.*

>>>>>><<<<<<

*திமுக - காங்கிரஸ் கூட்டணி இடையே கருத்து வேறுபாடுகள் நிலவிவருவதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி. தமிழசை சௌந்தரராஜன் கூறியுள்ளார்.*

*கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் கூட்டணி குறித்து பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருவதை சுட்டிக்காட்டினார்.*

*தேசிய ஜனநாயக கூட்டணி வலுவாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இந்த கூட்டணியில் பாமக இணைந்துள்ளது, கூடுதல் பலம் அளித்துள்ளதாகவும் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் கூறினார்.*

>>>>>><<<<<<

*ஆட்சி அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்பதே காங்கிரஸ் தொண்டர்களின் விருப்பமாக உள்ளது என்று அக்கட்சியின் நிர்வாகி திரு. பிரவின் சக்கரவர்த்தி கூறியுள்ளார்.*

*கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். காங்கிரஸ் கட்சி வலுப்பெற வேண்டும் என்ற நோக்கில் தொண்டர்கள் இந்த எதிர்பார்ப்பினை கொண்டிருப்பதாக தெரிவித்தார்.*

*கூட்டணி குறித்து கட்சித்தலைமை உரிய முடிவெடுக்கும் என்றும் திரு. பிரவின் சக்கரவர்த்தி கூறினார்.*

>>>>>><<<<<<

*வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், வலுவடைய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் (1) 32 செகண்ட்ஸ்)*

*இதன் காரணமாக மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் மிதமான மழைக்கும், சில இடங்களில் கனமழைக்கும் வாய்ப்புள்ளதாக அவர் கூறினார்.*

*(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் (2) 62 செகண்ட்ஸ்)*

*கடல்பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் அடுத்த 5 தினங்களுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக் கொண்டார்.*

*>>>>>><<<<<<<*

*பொங்கல் பரிசுத் தொகுப்பு நாளை முதல் வழங்கப்படவுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.*

*இதன்படி, 2 கோடியே 22 லட்சத்திற்கும் மேற்பட்ட அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சரக்கரை மற்றும் மூவாயிரம் ரூபாய் ரொக்கப்பணம் விநியோகிக்கப்படவுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>>><<<<<<<*

*மதுரை மாவட்டத்தில், அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில அமைச்சர் திரு. மூர்த்தி கூறியுள்ளார்.*

*அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கான முகூர்த்தக்கால் நடும் விழாவில் இன்று பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*போட்டியில் பங்கேற்பதற்கான காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கான அனுமதி, வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. மூர்த்தி தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<<*

*மாவட்டச் செய்திகள்*

*மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆட்சியர் திரு. பிரவின் குமார் இன்று ஆய்வு செய்தார்.*

*>>>>>><<<<<<<*

*தூத்துக்குடி மாவட்டத்தில் பொங்கல் பரிசுத் தொகுப்பு குறித்த புகார்களை இதற்கான கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவிக்கலாம் என்று ஆட்சியர் திரு. இளம் பகவத் கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<<<*

*நீலகிரி மாவட்டம், உதகை அருகே, மினி பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் காயமடைந்தனர்.*

*>>>>>><<<<<<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 394 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்து வரும் தென்னாப்பிரிக்கா சற்றுமுன்வரை 14 புள்ளி இரண்டு ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 54 ரன் எடுத்துள்ளது.*

*Benoni-யில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பந்து வீச தீர்மானித்தது.*

*இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 393 ரன் எடுத்தது.*

*Vaibav Sooryavanshi அதிரடியாக ஆடி 74 பந்துகளில் 127 ரன் குவித்தார்.*

*>>>>>><<<<<<<*

*பெங்களூரு ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar Suresh காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>>END<<<<<<<*